தொகுதி, ஒத்தக்கடையில் பணிமனை அமைப்பது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்குகின்றேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இந்த சட்டமன்றத்தில் அமரச் செய்து அழகு பார்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 68–வது பிறந்த நாள், உலகமெங்கும் கொண்டாடப்படும் பிறந்த நாள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளையும் வெல்வோம் வெல்வோம், வெல்வது நிச்சயம் என்று சொல்லி நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

101—

மரக்கன்றுகள் நடுதல்

***53870—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு மத்திய கைலாசம் முதல் பழைய மகாபலிபுரம் சாலையின் இருமருங்கிலும் வனத் துறை மூலமாக மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட, நித்தம் நித்தம் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை வாரிக் கொடுத்து, நான்கரை ஆண்டுகளில் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக உருவாக்கி, சரித்திரச் சாதனை படைத்த எங்கள் குல தெய்வம், ஒட்டுமொத்த தமிழர்களின் காவல் தெய்வம்,

2016 பிப்ரவரி 20]

கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்குமண்டல விவசாயப் பெருங்குடி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான அத்திக்கடவு–அவினாசித் திட்டத்தை நிறைவேற்றி, அதற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்க, 3.27 கோடி ரூபாய் நிதியினை (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கி, அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மாவட்ட மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். கடந்த சில நாட்களாக இப்பகுதிகளில் மக்களைத் திசைதிருப்பி, சில அரசியல் கட்சிகள் தங்களது சுயலாபத்திற்காக உண்மைக்கு மாறான பிரச்சாரங்களையும், கபட நாடகங்களையும் அரங்கேற்றினார்கள். அவை எல்லாவற்றையும் முறியடித்து, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு இப்பகுதி மக்களின் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, அவர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான இத்திட்டத்தைத் துவக்கிட அரசாணையை வெளியிட்டதைத் தொடர்ந்து வரும் சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் கொங்கு மண்டலம் என்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் அசைக்க முடியாத எஃகுக் கோட்டை (மேசையைத் தட்டும் ஒலி) என நிரூபித்து, வெற்றிக் கனிகளை தங்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிப்போம் எனத் தெரிவித்து மாவட்ட மக்களின் சார்பாக நன்றி கூறுகிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, அடையாறு மத்திய கைலாசம் முதல் ஓ.எம்.ஆர். சாலை முழுவதும் தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பில் உள்ளது. இந்த நிறுவனம் மரக் கன்றுகள் நடுவதற்கு உரிய கருத்துருவினை வனத் துறைக்கு அளிக்கும்பட்சத்தில் வனத் துறையின் மூலமாக மரக் கன்றுகள் நடுவதற்கு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.